# அக்டோபர் – 22 – பொதுக்கால 29 ம் ஞாயிறு

## முதல் வாசகம்: ஏசாயா 45 : 1,4 – 6

சைரசுக்கு ஆண்டவர் திருப்பொழிவு செய்துள்ளார் பிற இனத்தாரை அவர்முன் அடிபணியச் செய்வார். அரசர்களை அவர்முன் ஆற்றல் இழக்கச் செய்வார் கோட்டை வாயில்களை அவர்முன் பூட்டியிராது திறந்திருக்கச் செய்வார் அவரது வலக்கையை உறுதியாகப் பற்றிப் பிடித்துள்ளார் அவரிடம் ஆண்டவர் கூறுவது இதுவே. என் ஊழியன் யாக்கோபை முன்னிட்டும் நான் தேர்ந்துகொண்ட இஸ்ரயேல் பொருட்டும் பெயர் சொல்லி உன்னை அழைத்தேன் நீ என்னை அறியாதிருந்தும் உனக்குப் பெயரும் புகழும் வழங்கினேன்.நானே ஆண்டவர் வேறு எவருமில்லை என்னையன்றி வேறு கடவுள் இல்லை. நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு வலிமை அளித்தேன்.கதிரவன் உதிக்கும் திசை தொடங்கி மறையும் திசை வரை என்னையன்றி வேறு எவரும் இல்லை என்று மக்கள் அறியும்படி இதைச் செய்கிறேன் நானே ஆண்டவர் வேறு எவரும் இல்லை.

**பதில்பாடல் :** மாட்சியையும் ஆற்றலையும் ஆண்டவர் முன் சாற்றுங்கள்

## இரண்டாம் வாசகம் :1தெசலோனியர் 1 : 1 – 5

தந்தையாம் கடவுளோடும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கின்ற தெசலோனிக்க சபைக்கு, பவுலும் சில்வானும் திமொத்தேயுவும் எழுதுவது உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக! நாங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது இடைவிடாது உங்களை நினைத்து உங்கள் அனைவருக்காகவும் என்றும் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். செயலில் வெளிப்பட்ட உங்கள் நம்பிக்கையையும், அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கி இருப்பதால் நீங்கள் பெற்றுள்ள உங்கள் மனவுறுதியையும் நம் தந்தையாம் கடவுள்முன் நினைவு கூருகிறோம். கடவுளின் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! நீங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனெனில் நாங்கள் நற்செய்தியை உங்களுக்கு வெறும் சொல்லளவிலன்றி, தூய ஆவி தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ள உறுதியோடும் கொண்டுவந்தோம். உங்கள் பொருட்டு நாங்கள் உங்களிடையே எவ்வாறு நடந்துகொண்டோம் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

## நற்செய்தி : மத்தேயு 22 : 15 – 21

அக்காலத்தில் பரிசேயர்கள் எப்படி இயேசுவைப் பேச்சில் சிக்க வைக்கலாமெனச் சூழ்ச்சி செய்தார்கள்.தங்கள் சீடரை ஏரோதியருடன் அவரிடம் அனுப்பி, ”போதகரே, நீர் உண்மையுள்ளவர் எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கேற்பக் கற்பிப்பவர் ஆள் பார்த்துச் செயல்படாதவர் என்பது எங்களுக்குத் தெரியும்.சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? நீர் என்ன நினைக்கிறீர் என எங்களுக்குச் சொல்லும்” என்று அவர்கள் கேட்டார்கள்.இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்து கொண்டு, ”வெளிவேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்?வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள்” என்றார். அவர்கள் ஒரு தெனாரியத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள்.இயேசு அவர்களிடம், ”இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?” என்று கேட்டார்.அவர்கள், ”சீசருடையவை” என்றார்கள். அதற்கு அவர், ”ஆகவே சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்” என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** என் தலைவர் கூறுவது இதுவே: வாய்ச்சொல்லால் இம்மக்கள் என்னை அணுகுகின்றனர், உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர், அவர்கள் உள்ளமோ என்னை விட்டுத் தொலையில் இருக்கின்றது, அவர்களது இறையச்சம் மனம் செய்த வெறும் மனிதக் கட்டளையைச் சார்ந்ததே! (எசா.29:13) மனிதர்களை ஏமாற்றுவது போல் ஒருசிலர் கடவுளையும் ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கின்றார்கள். உள்ளொன்று வைத்துக் கொண்டு புறம் ஒன்று பேசி, வசீகர வார்த்தைகளால் வஞ்சனை செய்து மனிதர்களை ஏமாற்றுவது போல் கடவுளையும் ஏமாற்றிவிடலாம் என்று பலர் நினைத்து வாழ்கின்றார்கள். நம்மை எவர் காணப்போகின்றார்? நம்மை எவர் அறியப்போகின்றார் என்று கடவுள் நமக்குக் கொடுத்த வாழ்வோடு விளையாடிக் கொண்டிருக்கும் மனிதர்கள் இயேசுவின் பார்வையிலிருந்து தப்ப முடியாது. இயேசுவின் கண்களுக்கு எதுவும் மறைவாய் இருப்பதில்லை. மனிதரின் வழிகளுள் ஒன்றும் ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை, அவர்களுடைய பாதைகளை யெல்லாம் அவர் சீர்தூக்கிப்பார்க்கின்றார். (நீதி.5:21) ஆண்டவரின் கண்கள் கதிரவனைவிடப் பத்தாயிரம் மடங்கு ஒளி படைத்தவை, அவை மாந்தரின் வழிகளையெல்லாம் காண்கின்றன, மறைந்திருப்பவற்றை அறிகின்றன என்பதை அவர்கள் அறியார்கள். (சீரா 23:19) உலகம் என்னும் தங்கிச் செல்லும் கூடாரத்தில் (2கொரி5:4) வாழும் நாட்கள் எல்லாம் கடவுளுக்கு அஞ்சி வாழுங்கள், கடவுளுக்கு உரியது எது என தோந்து தெளிந்து செயல்படுங்கள், ஒளிபெற்ற மக்களாக வாழுங்கள் (எபே 5:8-10) என்று தூய பவுலடியார் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். மண்ணகத்து மனிதர்களை ஏமாற்றுவதுபோல் விண்ணகத்து இறைவனை ஏமாற்றிவிடலாம் என்று பொய்யான வேடங்களை அணிந்து திரியும் மனிதர்களை ஆண்டவர் இயேசு வெறுக்கின்றார். செயலில் வெளிப்படுத்தப்பட்ட விசுவாசமே சிறந்தது (யாக் 2:22) என்று கூறும் யாக்கோபின் வார்த்தைகளுக்கு இணங்க நம்முடைய விசுவாசத்தை, நம்பிக்கையை, பக்தியை நம்முடைய செயல்பாடுகளில் காண்பிக்க வேண்டும். இதைத்தான் இன்றைய இரண்டாம் வாசகம் நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது: செயலில் வெளிப்பட்ட உங்கள் நம்பிக்கையையும், அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கி இருப்பதால் நீங்கள் பெற்றுள்ள உங்கள் மனவுறுதியையும் நம் தந்தையாம் கடவுள்முன் நினைவுகூருகிறோம். ஆகவே இன்றைய நற்செய்திவாசகத்தில் இயேசு கொடுக்கும் படிப்பினையான கடவுளுக்கு உரியதை கடவுளுக்கு நாம் கொடுக்கப் பழகிக்கொண்டோம் என்றால் வாழ்வின் குழப்பங்களுக்கு, நம்முடைய வெளி வேடங்களுக்கு முற்றுப்புள்ள வைக்கலாம். உலகுக்கு நேரத்தைக் கொடுக்கும் நாம் கடவுளுக்கானன நேரத்தை சரியாகக் கொடுக்கின்றோமா? கடவுள் நமக்கு 24 மணிநேரம் கொடுத்திருக்கின்றார். அதிலே எவ்வளவு நேரம் கடவுளுக்காக நாம் கொடுக்கின்றோம். சிந்தியுங்கள்?